**திருகோணமலை நகர சபை**
**திருகோணமலை மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 மே 30, 2019 மே 31 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திருகோணமலை நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புகள் மீதான வட்டி வருவாயாகிய ரூபா 2,337,793 வருமானக் கணக்கில் ரூபா 3,532,041 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிப்பரீட்சைக்கு உரிய வட்டி வருமானம் மாத்திரம் கணக்கீடு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்புச் சபையின் பிரகாரம் பொதுக் களஞ்சியங்களது பொருட்களின் மொத்தப் பெறுமதி ரூபா 16,485,867 ஆகும். இது ரூபா 16,936,665 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் பொதுக் களஞ்சியப் பொருட்களது பெறுமதி ரூபா 453,798 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் இது சீராக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பதவியணியினருக்கான கடன் பதிவேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவைகளது மீதி ரூபா 21,316,765 ஆகும். நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 20,578,220 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, பதவியணியினருக்கான கடன் மீதி ரூபா 729,545 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் இது சீராக்கப்பட வேண்டும் | விடையளிக்கப்படும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டிற்குரிய வாடி வீட்டு வருவாயாகப் பெற வேண்டிய ரூபா 1,103,310 நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் இது சீராக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (உ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத நிலையக் களஞ்சியத்திலிருந்த மருத்துவக் கையிருப்பினது பெறுமதி ரூபா 132,098 ஆகும். இது நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் இது சீராக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஊ) | கேட்போர்கூடம், எரிபொருள் நிரப்பு நிலையம் என சபையால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் மொத்தக் கிரயம் 16,887,724 ஆகும். இது நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (எ) | சந்தைக் கூட்டுத் தொகுதி, சிகிச்சை நிலையம், தீயணைப்பு நிலையம் (Fire Brigade) என்பவற்றின் கட்டிடங்கள் பெறுமதியிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஏ) | ஊழியர் சம்பளம் மற்றும் உறுப்பினர் கொடுப்பனவாக உள்ளூராட்சி திணைக்களத்தினால் பெறப்பட வேண்டிய ரூபா 9,175,086 தொகை நடப்பு நிதி ஆண்டிலே கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்து. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2018 திசெம்பர் மாதத்திற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 27,594,787 மீளாய்வாண்டிலே கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்து. |
| (ஒ) | காசுப்புத்தகத்தின் படி வங்கி மீதி ரூபா 15,662,595 ஆக இருந்தும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 14,397,452 என காட்டப்பட்டிருந்தது. அதனால் வங்கியிலுள்ள பணம் ரூபா 1,265,143 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்து. |
| (ஓ) | மீளாய்வாண்டிலே 08 வெவ்வேறு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 869,604 வை செலுத்தி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | தீர்வு காண்பமற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்து. |

**1.3.2 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொங்கல் கணக்கு மீதி ரூபா 11,863,654 நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பான பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு தொங்கல் கணக்கு தீர்வு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

**1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

**தகவல்கள் சமர்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொத்தப் பெறுமதியாகிய ரூபா 346,062,670 உடைய 18 கணக்கீட்டுக் விடயங்கள் உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாமல் போனது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 177(2) ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களின் பொழிப்பு ஒவ்வொரு நிதியாண்டினதும் மார்ச் 01 அல்லது அதற்கு முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுமாயினும் அவ்வாறு நடைபெறவில்லை. | ஏற்பாடுகளுக்கு இணங்குதல். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) | சபையின் உத்தியோகத்தர்களுக்கும் தனி நபர்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 6,277,800 முற்பணத்தை தீர்வு செய்வதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஏற்பாடுகளுக்கு இணங்குதல் | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்கள் கடந்த பழைய வைப்பு ரூபா 18,025,855 தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளுக்கு இணங்குதல். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 880 | 07 உத்தியோகத்தர்களினால் அவர்களுக்காக ஊழியர் பிணை வைப்பு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளுக்கு இணங்குதல். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. |
| (இ) | 2016 டிசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசீலனை சபைக்குச் சொந்தமான 43 வாகனங்களுக்கு அவ்வாறான பரீசீலனை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்கியிருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2002 நவம்பர் 11 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உபகரணங்கள் தொடர்பாக நிலையான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்கியிருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 16,434,872 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 21,109,142 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் முன்னைய வருடத்திற்குரிய சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வீதவரியும் வரியும் | 43,420 | 41,077 | 41,080 | 99,802 | 43,480 | 35,188 | 24,971 | 16,035 |
| வாடகை | 30,707 | 21,205 | 21,129 | 26,968 | 20,104 | 21,482 | 16,466 | 5,015 |
| அனுமதிப்பத்திரம் | 5,275 | 5,175 | 5,175 | - | 4,500 | 4,442 | 4,442 | - |
| வேறு வருமானங்கள் | 49,663 | 27,623 | 27,624 | 336 | 61,525 | 17,927 | 17,927 | - |

### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குடியிருப்பாளர்களிடமிருந்து கடை வாடகை நிலுவையாக 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 689,734 மொத்தத் தொகை பெறப்பட்டிருந்தது. மொத்த அறவீடும் மொத்த நிலுவையிலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒவ்வொரு குடியிருப்பாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட அறவீட்டை இனங்கண்டு அதனைக் குறித்த வாடகையாளரது நிலுவையிலிருந்து கழித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் விளைவாக, குறித்த குடியிருப்பாளரின் நிலுவை கடை வாடகை முன் கொண்டுவரப்பட்டிருந்தது. | கடை வாடகை அறவிடும் போது தனித்தனியாக அடையாளங்க கண்டு முடியுமான வகையில் முறையான பதிவேடு பேணப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையின் மாகாண திறைசேரியின் 2018 ஆம் வருடத்திற்கு உரிய நீதிமன்றத் தண்டப்பண வருமாங்களின் முழுப் பெறுமதியை அடையாளங் கண்டு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பண்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் சம்பந்தமான காரணங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகரநபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிக் விதிக்கப்பட வேண்டிய இருப்பினும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போதும் உப விதிகள் விக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் 2018 ஆம் வருடத்திற்கான செயற்பாட்டுத் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |

## (இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் பிரதேசத்திற்குட்பட்ட பொது இடங்கள், அரச நிறுவனங்கள், பாடசாலைகள் என்பவற்றிற்கு கழிவுப் பொருட்களை பிளாஸ்டிக், பொலித்தீன், கடதாசி, சேதன மற்றும் கண்ணாடி என வெவ்வேறாக வகைப்படுத்தி கழிவுப் பொருட்களை வெவ்வேறாக்குவதற்கு PSDG மற்றும் யொவுன்புர நிகழச்சித்திட்டம் 2017 இன் கீழ் 664 கழிவுப்பொருள் கூடுகள் ரூபா 3,160,799 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நகரசபை 240 கழிவுப் பொருள் கூடுகளை பொது இடங்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் வழங்கியிருந்தது. கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட தெரிவுச் செவ்வைகளின்போது ஒரே நிறமுடைய, லேபல்கள் அற்ற (Lable ஒட்டப்படாத) கூடுகள் மூலம் வெவ்வேறுப்படுத்தப்படாது கழிவுப்பொருட்கள் மத்திய பஸ் நிலையம், வாகனத் தரிப்பிடம், பிரெடரிக் கோட்டை வீதி மற்றும் நகர சபை வளாகம் ஆகிய இடங்களில் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இத்தேவைகளைக் கருத்திற் கொள்ளாதும் முறையான விநியோகத் திட்டமும் பராமரிப்புமின்றி ரூபா 909,450 பெறுமதியான 230 கூடுகள் 2019 மே 17 வரை பயன்படுத்தப்படாதவாறுமிருந்தன. | ஒழுங்காக திட்டமிடப்பட்டு குப்பைத் தொட்டிகள் ஆக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |
| (ஆ) | நகர சபையின் பிரசேதத்திற்குள் அடங்கும் வீடுகளிலிருந்து பிளாஸ்ரிக், பொலித்தீன் கடுதாசிகள், கண்ணாடிப் பொருட்கள், சேதனப் பொருட்கள் என்பவற்றைப் சேகரிப்பதற்கு நகர சபை நிதியிலிருந்து 40,000 கழிவுப்பொருள் பைகள் ரூபா 1,530,800 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2018 மே 17 வரை ரூபா 993,787 பெறுமதியான 27,994 பைகள் பயன்படுத்தப்படாதிருந்தன. | திண்மக் கழிவுகளை பிரித்து சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |

கழிவுப்பொருட்களை வெவ்வேறாக்கும் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படாமையே இதற்கான காரணமாகும்.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சீமெந்து வேலை, தச்சுத்தொழில் வேலை, கராஜ், அரிசி ஆலை என்பவற்றின் உரிமையாளர்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை நகர சபையிடமிருந்து பெற வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிடப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் பெறப்படவில்லை. | ஆய்வொன்று நடாத்தப்பட்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |
| (ஆ) | நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரசேதத்தில் வருடாந்தம் ஏறக்குறைய 19,350 தொன் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன. இவை வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான கண்ணியா எனுமிடத்தில் முறையற்றவாறு கைதவிர்ப்புச் செய்யப்படுகின்றன. இதன் விளைவாக, மழைக்காலத்தில் சுற்றாடல் பிரச்சினைகள் உருவாவதுடன் மிருகங்களுக்கு சுகாதார ரீதியான தீமைகளும் ஏற்படுகின்றன. | சுற்றாடல் பிரச்சினை ஏற்படாத வகையில் குப்பைகளை அகற்றுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | விடையளிக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் கட்டுப்பாட்டு எல்லை பிரதேசத்திலே குறைந்த நிறையுடன் 2015, 2016, 2017 மற்றும் 2018 வருடங்களிலே பிறந்த | குறைந்த நிறையுடைய பிள்ளைகள் பிறப்பு எண்ணிக்கை | விடையளிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் முறையே 8.87%, 9.46%, 10.9% மற்றும் 10.1% ஆக இருந்ததுடன் சபையினால் இந்த சதவீதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | யுடைய குறைப்பதற்கு நடவடிக்கைக மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (ஆ) | நகர சபையின் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் (Quarters) 40 உத்தியோகத்தர் வாடகை செலுத்தாமையால் ரூபா 663,935 மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் நிலுவையாக காணப்பட்டது. எப்படியாயினும், இந்த நிலுவை வாடகையை அறவிட்டுக் கொள்வதற்கு முறையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |
| (இ) | தாபனக் கோவை XIX அத்தியாயம் 6.3 பிரிவின் படி அரச உத்தியோகபூர்வ இல்லங்களை அரச உத்தியோகத்தர்கள் மாத்திரமே பாவனைக்குட்படுத்த முடியும் எப்பிடியிருப்பினும் தனிப்பட்ட பிரிவினருக்காக சபையின் இல்லங்கள் 05 வழங்கப்பட்டிருந்தது. | அவர்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |
| (ஈ) | தாபனக் கோவையின் XIX அத்தியாயம் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரச உத்தியோகபூர்வ இல்லங்கள் கூடுதலாக 05 வருடங்களுக்கு மட்டுமே வழங்க முடியும். அப்படியிருந்தும் சபையினால் 05 வருடங்களுக்கு அதிக காலத்திலிருந்து 17 உத்தியோகத்தர்களுக்கு அரச இல்லங்கள் வழங்கப்பட்டிருந்தது. | தாபனக் கோவை பின்பற்றப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |
| (உ) | சபைக்கு உரிய 13 வாகனங்களுக்காக வருமான உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | வருமான உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | விடையளிக்கப்படும். |
| (ஊ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 164(2) பிரிவின் பிரகாரம் நகர சபைக் கட்டுப்பாட்டு எல்லையிலே | வரி அறவிடப்பட வேண்டும். | விடையளிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைப்படுத்தப்படும் விடுதிகளில் அந்த விடுதியின் முழு வருமானத்தில் வரி அறவிடப்பட வேண்டும். எப்படியிருப்பினும், 2017/2018 நிதி ஆண்டிற்காக 03 சுற்றுலா விடுதிகளிலிருந்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அதனால் சபை ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக ரூபா 350,000 வான வருடமொன்றை அறவிட முடியாது போயுள்ளது. | | |
| (எ) | 2017 மே மாதத்திலிருந்து நிலுவையாக காணப்பட்ட வாடி வீட்டுக் கட்டணம் ரூபா 1,838,850 ஐ அறவிடுவதற்காக சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டியமை. | விடையளிக்கப்படும். |
| (ஏ) | 01 வருடம் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலமாக நிலுவையாக காணப்பட்ட நிலுவை வியாபார கடை வாடகை ரூபா 29,832,841 வை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டியமை. | விடையளிக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மாற்றப்பட்ட ஊழியர் கடன் ரூபா 119,295 வை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அது 2016 ஆம் வருடத்திலிருந்து காணப்பட்டு வருகிறது. | மீதமாகவுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |
| (ஆ) | சபையின் கணக்காளர் பதவி 12 ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளபோதும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க மேற்கொண்டிருக்க வில்லை. | விடையளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையின் செயலாளர் பதவி இலங்கை நிர்வாக சேவைத்தரத்தினதாகும். | செயலாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |
| (ஈ) | வெற்றிடமாக உள்ள முகாமைத்துவ உதவியாளர், சுகாதார மேற்பார்வையாளர், மருத்துவ உதவியாளர், பொதுச்சுகாதார உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர், நூலகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சந்தை மேற்பார்வையாளர், இயந்திர இயக்குபவர், வருமான பரிசோதகர், தச்சு தொழிலாளி மற்றும் இயந்திர திருத்த வேலையாளர் ஆகிய பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | - | விடையளிக்கப்படவில்லை. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 390 கடைகளில் 111 கடைகள் 2014 தொடக்கம் பயன்படுத்தப்படாதிருந்தன. 2018 ஆம் ஆண்டில் 47 கடைகள் வாடகைக்கு வழங்கப்படாதிருந்தன. எவ்வாறாயினும், அக்கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு சபை இதுவரை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. கடை வாடகையாக 2018 ஆம் வருடத்திற்காக சபையினால் ரூபா 19,738,484 பெறப்பட்டிருந்தது. | கடைகளை வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |
| (ஆ) | சபையானது இறுதியாக 2010 ஆம் ஆண்டிலேயே சொத்துக்களது வரி | சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டு வரி | விடையளிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டை மேற்கொண்டிருந்தது. அந்த ஆண்டிற்குரிய பெறுமதியிலேயே அது அமைந்திருந்தது. எனினும், தற்போது சில கட்டிடங்கள் அகற்றப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. எவ்வாறாயினும், சொத்துக்களை மீள மதிப்பிடு செய்து சரியான வருடாந்தப் பெறுமதியை நிர்ணயிப்பதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 17 வாகனங்கள் 01 முதல் 10 ஆண்டுகளாக சபை வளாகத்தில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அழிப்பதற்கு அல்லது பாவனைக்குட் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் நகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட வீரநகரில் உள்ள மருத்துவ மனைகளிலிருந்து அகற்றப்படும் பாதகமான கழிவுப் பொருட்களை எரிப்பதற்கான கருவி ஒன்று நிறுவப்படுவது ஆரம்பமாகியது. 2017 ஆம் ஆண்டில் நிறைவடைந்த இவ் வேலைக்கு ரூபா 5,595,830 செலவாகியிருந்தது. எவ்வாறாயினும், இந்த எரிப்பதற்கான கருவி 2019 மே 17 ஆந் திகதியாகும் போதும் விளைவற்றுக் காணப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை படையனியினரால் 2017 ஆம் ஆண்டில் நகர சபைக்கு உரிய பவர் ஸ்டேசனில் அமைந்துள்ள காணி மற்றும் வியாபார கட்டிடத்தை கையளிக்கப்பட்டிருந்தாலும் அதை பயன்தரக்கூடிய வகையில் பாவனைக்குட்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | அந்த சொத்துக்களை பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் வருட பொருட்கள் மதிப்பீட்டின் பிரகாரம் 2077 குறை பொருட்களும் மற்றும் 139 மேலதிகமும் அடையாளம் காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் தினத்தன்றும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. அத்தோடு நகர சபையினால் மதிப்பீட்டில் சுற்றறிக்கையின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

## 3.6 பொருட் கொள்வனவு

### 3.6.1 பொருட் கொள்வனவுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/28 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையானது 2018 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | பொருட் கொள்வனவு திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.6.2.1 கோணேசர் கோவில் வீதியில் மெக்கெய்சார் திடலில் வேலி ஒன்றை அமைத்தல்

வாகனங்கள் உட்புகுவதைத் தவிர்ப்பதற்கென கோணேசர் கோவில் வீதியில் மெக்கெய்சார் திடலில் வேலி ஒன்றை அமைப்பதற்கு 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதியன்று ரூபா 1,207,850 பெறுமதியான ஒப்பந்தம் சனசமூக நிலையம் ஒன்றிற்குச் சபையால் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 22 ஆந் திகதிய கொடுப்பனவுகளுக்கான பட்டியலின் பிரகாரம் 85 GI குழாய் தூண்களுக்கும் 300 அ GI குழாய்களுக்குமான வேலை திருப்திகரமாக நிறைவேறியதாகச் சான்றுறுதிப்படுத்தி ரூபா 567,350 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சனசமூக நிலையம் ரூபா 304,430 கூட்டுத் தொகையுடைய 58 GI தூண்களையும் 90 அ GI தூண்களையும் மாத்திரமே பொருத்தியிருந்தது. அதனால் 27 GI தூண்களுக்கும் 210 அ GI குழாய்களுக்கும் ரூபா 262,920 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மீண்டும் அறவிடப்பட வேண்டும். | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | உடன்படிக்கைப் பிரகாரம், 2017 நவம்பர் 20 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாண வேலை முடிவடைய வேண்டுமாயினும், 2019 மே 17 வரை வேலை முடிவடையாதிருந்தது | தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | சிறுவர் பூங்காவை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நகர சபையினால் தனி ஊஞ்சலொன்றும் இரட்டை வழுக்கும் ஊஞ்சளும் (Double Swing Slider) ரூபா 235,000 க்கு 2018 பெப்ரவரி 23 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. வழுக்கும் ஊஞ்சலை பொருத்தாததன் காரணமாக 2019 மே 16 ஆந் திகதியாகும் போதும் விளைவற்ற பாவனையாக காணப்பட்டது. | பொறுப்பான உத்தியோகத் தரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) இலக்கமுடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நகர சபையினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) இலக்கமுடைய கணக்காய்வு மற்றம் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நகர சபையினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

### 4.3 பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கழிவுநீர் சுத்திகரிக்கப்படுதல் மற்றும் வெளியேற்றும் கழிவு நீர் சுத்தகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டிருந்ததுடன் அதன் முக்கிய விடயமானஇயந்திரத்தின் மீது கயிறு பொருத்தப்படும் பிரதான பணி நடைபெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக, சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் சுற்றாடலில் கலந்தமையால் சுற்றாடல் மாசுபடுவதைத் தடுக்கும் | அபிவிருத்தி செயற் திட்டமொன்று ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப் படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நோக்கம் நிறைவேறவில்லை. செலவழித்த தொகை பயனற்றதாகியது. | | |
| (ஆ) | சபைக்குரிய காணிகளை தனி நபர்களுக்கு வழங்குவதற்கான அதிகாரம் தலைவருக்கு இல்லாதபோதும் சபையின் 3,212 பேர்ச் காணிகள் 2008 ஆம் ஆண்டில் முன்னாள் தலைவரால் 576 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. 2010 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதனை விசாரிப்பதற்கு ஒய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதவான் ஒருவரை முதலமைச்சர் நியமித்திருந்தார் அவரது அறிக்கையின் பிரகாரம் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பன நகர சபையால் கடைப்பிடிக்கப்படுவது தவறியிருந்தமை தெரிய வந்தது. அதன் காரணமாக, 2015 மே 26 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் மீதான மாகாணக் குழுவின் கட்டளையில் குறிப்பிடப்பட்டவாறு முதலமைச்சரின் செயலாளர் தலைமை தாங்கும் குழு ஒன்று தயாரிக்கப்பட்டு இது தொடர்பாக விசாரனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குறித்த குழுவானது இது தொடர்பாக 2018 யூன் 29 வரை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருக்காமையால் தலைவருக்கு எதிரான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மேலும் தாமதம் ஏற்பட்டது. | இது விடயமாக அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப் படவில்லை. |
| (இ) | திண்மக் கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் இடத்தில் யானைகள் உட்புகாதவாறு 2014 ஆம் அண்டில் சபையால் மின்சார வேலி ஒன்று ரூபா 618,858 கிரயத்தில் அமைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மின்சாரம் வழங்கப்பட்டமையால் யானைகள் மின்சார வேலியை அழித்திருந்தன. தற்போது காணியைச் சுற்றிவர மின்சார வேலி இல்லாததும் யானைகள் திண்மக் கழிவுப் பொருட்களை உண்பதற்கு வருவதும் அவதானிக்கப்பட்டது. | இது விடயமாக அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப் படவில்லை. |